
# பகிர்தல் & அக்கறை காட்டுதல்



CAG
Citizen consumer and civic Action Group


புதிய எண் 246 (பழைய எண் 277B), டி.டி.கே ரோடு (ஜே.ஜே. சாலை), ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018. இந்தியா
தொலைபேசி: +91 44 2499 4458 / 2466 0387 மின்னஞ்சல்: helpdesk@cag.org.in இணையதளம்: www.cag.org.in


## சிட்டிஸன் கன்ஸ்யூமர் அண்டு சிவிக் ஆக்ஷன் க்ரூப் (சி.ஏ.ஜி)

சிட்டிஸன் கன்ஸ்யூமர் அண்டு சிவிக் ஆக்ஷன் க்ரூப் (சி.ஏ.ஜி) என்பது நுகர்வோர் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளில் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், வெளிப்படைத் தன்மை, பொறுப்பாக இருத்தல் மற்றும் பங்கேற்பு முறையில் முடிவு எடுத்தல் உள்பட சிறந்த நிர்வாக செயல்முறையை ஊக்குவிக்கவும் பணியாற்றி வருகின்ற ஒரு 36 ஆண்டுகளைக் கடந்த சென்னையில் உள்ள லாபநோக்கற்ற, அரசியல் சார்பற்ற மற்றும் தொழில்முறையிலான நிறுவனமாகும்.

வாநகரம் மாநகரம் (VM) ஹவுசிங் வில்லேஜ் என்பது 200 அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கொண்ட ஒரு பாதுகாப்பான குடியிருப்பு பகுதியாகும். அந்த குடியிருப்பில் இருந்த குழந்தைகள் ஒன்றாக சேர்ந்து ஒரு நலசங்கத்தை உருவாக்குவது என்று முடிவு செய்தனர். இது குழந்தைகள் அனைத்தும் ஒன்றாக சேர்ந்து சமூக நலனுக்காக எப்படி ஒரு 'வளரிளம் பிள்ளைகளுக்கான சங்கத்தை' உருவாக்கினார்கள் என்பதைப் பற்றிய கதையாகும்.




VM குடியிருப்போர் நல சங்க ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்று வருகிறது. குடியிருப்பின் குழந்தைகள் அங்கு அனுமதிக்கப்படவில்லை. அவர்களில் சிலர் அநன்யாவின் வீட்டில் ஒன்று கூடினர்.
ஒன்றாக சேர்ந்து இரவு சாப்பாடு தயார் செய்யலாமா?
ஹம், நாம வேற ஏதாவது செய்யலாமா?
இந்த சங்க கூட்டம் எப்பவுமே அதிக நேரம் எடுக்குது, எப்ப பாரு அவங்க எல்லாம் பேசிக்கிட்டே இருக்காங்க!


அஜித், சுஷ்மா மற்றும் அநன்யா இரவு உணவு தயாரிக்க ஆரம்பித்தனர்
ஆமா பார்க்கிங் வசதி, லிஃப்ட் பகுதியை எப்படி பராமரிக்கிறது அப்படின்னு,
அவங்க இங்க இருக்க பொதுவான வசதிகளைப் பராமரிக்கிறது பத்தி அப்பறம் நாம குப்பைகளை தரம் பிரிக்கிறது பத்தியெல்லாம் பேசுவாங்க
நாம போயி பாக்கலாமா?
கண்டிப்பா பாக்கலாம்



VM குடியிருப்போர் நல சங்க
ஆண்டு பொதுக்குழுக் கூட்டம்
நாம இதைவிட ஏதாவது சிறப்பான முறையில் செய்யனும். திரு. சாமி என்ன சொல்றாரோ அதைப் பத்தி நாம வாக்கெடுப்பு நடத்தலாம்


VM குடியிருப்போர் நல சங்க
ஆண்டு பொதுக்குழுக் கூட்டம்
வாவ்! சுவாரஸ்யமா இருக்கு! நாம ஏன் நமக்காக ஒரு சங்கத்தை உருவாக்க கூடாது?
நமக்காக மட்டுமா?
குடியிருப்பில் உள்ள எல்லா குழந்தைகளுக்கும் தான்! நாம அவங்க எல்லாத்ரையும் ஒன்னா சேர்க்கலாம்!
நாம அதை எப்படி செய்யறது?



அந்த குழுவினர் பல்வேறு குடியிருப்புக் கட்டிடங்களில் உள்ள குழந்தைகளின் பட்டியலைத் தயாரிக்கவும், அவர்களின் பெயர், வயது மற்றும் வகுப்பு போன்ற தகவல்களை சேகரிக்கவும் முடிவு செய்கின்றனர். தங்களுக்கான சங்கத்தை உருவாக்குவது என்கின்ற யோசனையைப் பற்றி அனைவரிடம் சொல்வது என்று அவர்கள் முடிவு செய்கின்றனர். சேகரித்த விவரங்களுடன் ஒரு வாரத்திற்குப் பிறகு சந்திப்பது என்று முடிவு செய்கின்றனர்.
நாம நமக்குன்னு ஒரு சங்கத்தை உருவாக்கி நிறைய விஷயங்களை ஒன்னா செய்யலாம்.... ஹா, ஹா, ஹா...



அவர்கள் சேகரித்த தகவல்களுடன் அடுத்த வாரத்தில் அந்த குழுவினர் சந்தித்தனர். அவர்களது அனுபவம் ஆக்கப்பூர்வமாக இருந்தது மேலும் குடியிருப்பில் உள்ள அனைத்து குழந்தைகளும் சங்கத்தில் சேர்வதற்கு ஆர்வம் தெரிவித்தனர்.
அடுத்த வாரம் சனி ஞாயிற்றுக் கிழமையில் நம்ம சங்கத்தை துவங்க எல்லாரையும் அழைக்கலாம்.
நல்ல யோசனை



எல்லா குழந்தைகளும் சமூகக் கூடத்தில் ஒன்று கூடினார்கள், அஷ்வின், அநன்யா, நிஷா, ராஜூ, சுஷ்மா மற்றும் அஜித் ஆகியோர் அவர்களை வழிநடத்தினர்
ஹை, நான் அஷ்வின்
நான் ராஜூ
நான் அநன்யா
நான் நிஷா
நான் அஜித்
நான் சுஷ்மா


எல்லா குழந்தைகளும் சங்கத்திற்கு பெயரை முடிவு செய்தனர் மேலும் அஷ்வின், அநன்யா, நிஷா, ராஜூ, சுஷ்மா மற்றும் அஜித்தை சங்கத்தின் பொறுப்பாளர்களாகத் தேர்வு செய்தனர்
நாம் இங்கே நம்ம சங்கத்தை துவங்குவதற்காக ஒன்று கூடியுள்ளோம்
நாம அதை வளரிளம் பிள்ளைகள் சங்கம்னு சொல்லலாமா?
நல்ல யோசனை
நீங்கதான் எங்களை வழி நடத்தி நாங்க என்ன செய்யணும்னு சொல்லணும்.


ஒரு வாரம் கழித்து, அவர்கள் என்ன மாதிரியான செயல்களைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி பேசுவதற்கு வளரிளம் பிள்ளைகள் சங்கத்தின் பொறுப்பாளர்கள் ஒன்று கூடினார்கள். ஒவ்வொருவரும் ஒரு யோசனை கூறினர், அவர்கள் ஏதாவது பயனுள்ள காரியத்தை செய்து மற்றவர்களிடையே அவர்களது சங்கத்தை பெருமைப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தனர்.





நீ என்ன யோசிக்கிற சுஷ்மா?
என்னோட சுற்றுச்சூழலியல் ஆசிரியர் வளங்களைப் பகிர்ந்து கொள்வது பற்றி, அதை அன்றாட வாழ்வில் பின்பற்றுவதைப் பற்றி விளக்கினார்கள். அது நீடித்த வாழ்வுக்கும் வளங்களை சேமிப்பதற்குமான ஒரு வழியாகும். எனக்கு அது மிகவும் பிடித்திருந்தது. அது சம்மந்தமாக நாம் ஏதாவது செய்யலாமா?
நானும் அது சம்மந்தமாதான் யோசிச்சேன்.
வாவ்! நமக்கு ஒரு அற்புதமான யோசனை கிடைச்சிருக்கு!


நாம பகிர்ந்துகொள்ள வளங்களை எப்படி கொண்டு வர்றதுன்னு யோசிக்கலாமா.
அதாவது, பகிர்ந்து வாழ்தலா?
என்ன ஒரு அற்புதமான பெயர் - பகிர்ந்து வாழ்தல்!
சுவாரஸ்யமா இருக்கு!


சுஷ்மா அவரது ஆசிரியர் வகுப்பறையில் சொன்ன யோசனைகளை விளக்கினார். தங்கள் குடியிருப்பில் அதை செயல்படுத்துவது என்று அனைவரும் முடிவு செய்கின்றனர்.






வளரிளம் பிள்ளைகள் சங்க கூட்டம் சமூக கூடத்தில் நடைபெறுகிறது இதில் பொறுப்பாளர்கள் வளங்களைப் பகிர்தல் மற்றும் நீடித்த வாழ்வின் முக்கியத்துவத்தை விளக்குகின்றனர். ஒரு சமூக பணிக்கான தங்கள் திட்டத்தையும் அவர்கள் கூறுகின்றனர்.
நண்பர்களே எங்களுக்கு சில யோசனைகள் இருக்கு. சுஷ்மா இதை நம்மிடம் பகிர்ந்து கொள்வார். உங்கள் கருத்துக்களை தாராளமா சொல்லுங்க.



இதிலிருந்து நம்ம நாட்டில் உள்ள பல மக்களுக்கு ஒரு நாளைக்கு ஒருவேளை சாப்பாடு கூட சரியா கிடைப்பதில்லைன்னு தெளிவா தெரியுது. அதனால சாப்பாட்டை வீணாக்குவது ஒரு பாவம்.
உலகப் பட்டினிக் குறியீடு: 107 நாடுகளில் இந்தியா 94 வது இடத்தில் உள்ளது
அடக் கடவுளே! கேக்கவே அதிர்ச்சியா இருக்கு



தேவையான அளவு மட்டும்தான் சமைக்கணும்னு நம்ம குடும்பத்தினர்கிட்ட நாம சொல்லணும். சாப்பாடு அதிகமா இருந்தா நாம அதை நண்பர்கள், அக்கம் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள், வீட்டில் வேலை செய்பவர்கள், மற்றும் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். அது வீணாகக் கூடாது.
உலகப் பட்டினிக் குறியீடு: 107 நாடுகளில் இந்தியா 94 வது இடத்தில் உள்ளது
கண்டிப்பா ஒத்துக்குறேன்



பண்டிகைகள், விழாக்கள் மற்றும் பிறந்த நாள் பார்ட்டிகளில் மிச்சமாகும் சாப்பாட்டை கைவிடப்பட்டோர்/ ஆதரவற்றோர் இல்லங்களுக்கு கொடுக்கணும். நீங்க என்ன நினைக்கிறீங்க?
சரியா சொன்னீங்க!


• வளங்களைப் பகிர்ந்துகொள்வது மிகவும் அவசியம்
• இது சமத்துவத்தை ஊக்குவிக்கும்
• இது எதிர்கால சந்ததியினருக்கு வளங்களைப் பாதுகாக்கும்
• சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்


நாம நல்ல நிலையில் உள்ள பொருட்களை தூக்கிப்போடாமல் அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம், உதாரணமா புத்தகங்கள், எழுது பொருட்கள், பொம்மைகள், ஆடைகள், வீட்டுப் பொருட்கள் போன்றவை. அவற்றை மறுபடி பயன்படுத்தலாம் அல்லது மறுசுழற்சி/மேல்சுழற்சி செய்து பயன்படுத்தலாம்
• வளங்களைப் பகிர்ந்துகொள்வது மிகவும் அவசியம்
• இது சமத்துவத்தை ஊக்குவிக்கும்
• இது எதிர்கால சந்ததியினருக்கு வளங்களைப் பாதுகாக்கும்
• சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்
மறுசுழற்சி, மேல்சுழற்சி செய்த பொருட்களுக்கு சில உதாரணம் சொல்ல முடியுமா?
நான் சொல்றேன்


நாம பழைய துணியை வச்சி கால்மிதிகள், பர்ஸ், கைப் பைகள் போன்றவற்றை செய்யலாம். பயன்படுத்திய உடைந்த காஃபி கோப்பைகள், அட்டைப் பெட்டிகளை வச்சி நாம பேனா ஸ்டாண்டு, நகைப்பெட்டி போன்றவற்றை செய்யலாம். சரியா?
வளங்களைப் பகிர்ந்து
மிகவும் அவசியம்
இது சமத்துவத்தை ஊக்குவிக்கும்
இது எதிர்கால
வளங்களைப்
சுற்றுச்சூழலைப்
அருமை
இதெல்லாம் கேக்க சுவாரஸ்யமா இருக்கு!


சுஷ்மா ராஜுவை அவர் யோசிச்ச நிகழ்ச்சி பற்றி பேசும்படி கூறினார். பின்னர் பொறுப்பாளர்கள் அந்த நிகழ்ச்சிக்கான ஒரு தேதியை முடிவு செய்தனர்
நம்ம சமூகக் கூடத்துல பகிர்ந்துகொள்ளும் நாளுக்கு ஏற்பாடு செய்றதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க? நான் அது என்னன்னு சொல்றேன்... நாம இப்போது பயன்படுத்தாமல் நல்ல நிலையில் உள்ள பொம்மைகள், புத்தகங்கள், எழுது பொருட்கள், ஆடைகள், வீட்டு உபயோகப் பொருட்களைக் கொண்டு வரலாம். அவற்றைக் காட்சிப்படுத்தலாம். நாம் இங்கு குடியிருப்போர், பாதுகாப்புப் பணியாளர்கள், வீட்டு வேலை செய்வோர், பழுது நீக்கம் செய்வோர் ஆகியோரை அழைக்கலாம். அவர்கள் வந்து அவர்களுக்குத் தேவையானதை எடுத்துக் கொள்ளட்டும். அதன்பின் மீதமுள்ளவற்றை தேவையானவர்களுக்கு கொடுத்துவிடலாம்.
அற்புதமான யோசனை
இதை நினைக்கும்போதே எனக்கு உற்சாகமா இருக்கு


பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும் அந்த நிகழ்ச்சிக்கான ஒரு பெயரை முடிவு செய்தனர்.
இந்த நிகழ்ச்சிக்கு நாம பகிர்ந்து வாழ்தல்னு பெயர் வைக்கலாமா? நீங்க என்ன நினைக்கிறீங்க?
நாங்க ஒருசில நாட்களில் நிகழ்ச்சி தேதி மற்றும் நேரத்தை எல்லாருக்கும் தெரிவிப்போம்
நல்ல யோசனை!
நாங்க இதைப் பத்தி எங்க பெற்றோரிடம் சொல்றோம்.
எனக்கு இந்த யோசனை ரொம்ப பிடிச்சிருக்கு


பகிர்ந்து வாழ்தல் திட்டத்திற்கு
வளரிளம் பிள்ளைகள் சங்கம் உங்களை வரவேற்கிறது



பகிர்வது நிலையான
வளர்ச்சியை
ஊக்குவிக்கிறது
பகிர்ந்து
வாழ்தல் திட்டம்


பகிர்தல் மற்றும் அக்கறை காட்டுதல்
பகிர்ந்து வாழ்தல் திட்டம்


பகிர்தல் மற்றும் அக்கறை காட்டுதல்
பகிர்ந்து வாழ்தல் திட்டம்


மறு பயன்பாடு!
மறுசுழற்சி!
பகிர்ந்து
வாழ்தல் திட்டம்


பகிர்ந்து வாழ்தல் திட்டத்திற்கு
வளரிளம் பிள்ளைகள் சங்கம் உங்களை வரவேற்கிறது
வளங்களைப் பகிர்ந்துகொள்வது மிகவும் அவசியம்! இது சமத்துவத்தை ஊக்குவிக்கும்; இது எதிர்கால சந்ததியினருக்கு வளங்களைப் பாதுகாக்கும்; சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்.
நல்ல நிலையில் உள்ள பொருட்களை தூக்கிப்போடாதீர்கள் பகிர்ந்து வாழுங்கள்!


குழந்தைகளின் சமூகத் திட்டப்பணியைப் பற்றி அங்கு குடியிருக்கும் பெரியோர் பேசிக் கொள்கின்றனர்
ஆமாம். இது ரொம்பவே பயனுள்ள வேலைதான். என் பொண்ணு என்கிட்ட அவங்க சங்கத்தைப் பத்தி சொன்னப்ப, அவங்க என்ன திட்டமிடப் போறாங்கன்னு எனக்கே ஆர்வமா இருந்தது.
குழந்தைங்க என்ன ஒரு அற்புதமான வேலைய செஞ்சிருக்காங்க!
நம்ம குழந்தைகளை நினைச்சு எனக்கு பெருமையா இருக்கு, அவங்க நம்மளை சிந்திக்க வச்சிருக்காங்க!
அவங்க இன்னைக்கு நமக்கும் ஒரு விஷயத்த கத்துக் கொடுத்திருக்காங்க


VM குடியிருப்பில் நடக்கும் நிகழ்ச்சி பற்றி அக்கம் பக்கத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பின் குழந்தைகள் விசாரித்தனர்
உங்கள் குடியிருப்பில் என்ன நிகழ்ச்சி நடந்தது?
நாங்க "வளரிளம் பிள்ளைகள் சங்கம்" உருவாக்கி இருக்கோம் அதன் மூலமா இன்றைக்கு "பகிர்ந்து வாழ்தல் - திட்டத்தை"...
கேக்கவே ரொம்ப சுவாரஸ்யமா இருக்கே! நாங்களும் இதுமாதிரி ஏதாவது செய்யணும்.


பகிர்ந்து வாழுதல் திட்டத்தின் வெற்றியைக் கொண்டாட அஷ்வின், அநன்யா, சுஷ்மா, ராஜூ, நிஷா மற்றும் அஜித் ஒன்றுகூடினர். அந்த நிகழ்ச்சியில் மிஞ்சிய பொருட்களை தானமாக வழங்க அவர்கள் முடிவு செய்தனர்.
இன்றைய நிகழ்ச்சியின் வெற்றியைக் கொண்டாட மூணு முறை சியர்ஸ் சொல்லுங்க.
நாம இன்னொரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய மூனு மாதங்களுக்கு பிறகு சந்திப்போம்.


இந்த செய்தியை மக்கள் புரிஞ்சிக்கிட்டதை நினைச்சு எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு.
இதைப் பத்தி என் பள்ளி நண்பர்கள்கிட்ட சொல்ல நான் ஆர்வமா இருக்கேன்!

உள்ளடக்கம் மற்றும் சித்திர வடிவமைப்பு:
**கவிதா கிருஷ்ணகுமார்**

வடிவமைத்தோர்
**compuprint.in**